பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு


சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 13 திங்கட்கிழமை 29.11.2021 கதிர் 252

## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

இலங்கையில் சீரற்ற காலநிலை தொடர்ந்து வரும் நிலையில் 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது. 2







# ஒற்றுமை முயற்சிக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## மாவையின் கருத்தை ஏற்று சித்தார்த்தன் அறைகூவல்

**தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.** 2

## சித்தர் தலைமையில் மாவை இணைவது பெரும் மகிழ்ச்சி

### இப்படிக் கூறுகின்றார் செல்வம்



(ந.லோகதயாளன்)

சித்தார்த்தன் தலைமையில் எதிர்காலத்தில் மாவை சேனாதிராஜா இணைவது பெருமகிழ்ச்சி அளிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் செய 2

## ‘யுகதனவி ஒப்பந்தம்’ மீறல் மனு; விசாரணைக்கு திகதி அறிவிப்பு

கெரவலப்பிட்டிய ‘யுகதனவி’ ஒப்பந்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை எதிர்வரும் 16ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி விவகாரம் தொடர்பான மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, பிரியந்த 2

## இலங்கையைச் சேர்ந்த 4 இஸ்லாமியர்கள் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கையைச் சேர்ந்த 4 இஸ்லாமியர்கள் இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அந்தமான் தீவு எல்லைக்குள் அத்துமீறி உள்நுழைந்த குற்றச்சாட்டில் இந்தியக் கடற்படையினரால் இன்று கைதுசெய்யப் 2

## பாணின் விலை மேலும் உயருமா?

450 கிராம் எடையுடைய ஒரு இறாத்தல் பாணை குறைந்தபட்சம் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமை 2

## ஹப்புத்தளை ‘வை’ சந்தி பகுதியில் 350 அடி பள்ளத்தில் பாய்ந்தது வான்



ஹப்புத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, ஹப்புத்தளை ‘வை’ சந்தியில் சுமார் 350 அடி பள்ளத்தில் வீழ்ந்து வானொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து தியத்தலாவைக்குப் பயணித்துக் கொண்டிருந்த வானே நேற்று அதிகாலை 4.40 மணியளவில் 2



## ஹற்றன் உணவகத்திலும் எரிவாயு வெடிப்பு சம்பவம்

ஹற்றன், மல்லியப்பூ சந்திப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு கசிவு காரணமாக நேற்றுக் காலை வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது. 2

## தடை செய்யப்பட்ட நாடுகளில் இருந்து இரு வாரங்களாக எவரும் வரவில்லை

### சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



புதிதாகக் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் கொரோனா மாறுபாட்டின் அச்சுறுத்தல் காரணமாக, நாட்டுக்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்ட ஆறு தென்னாபிரிக்க நாடுகளின் சுற்றுலாப் பயணிகள், கடந்த 14 நாள்களாக நாட்டுக்கு வரவில்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா, நமீபியா, போட்ஸ்வானா, சிம்பாப்வே, லெசோதோ மற்றும் சுவாசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகள், கடந்த 14 நாள்களாக நாட்டுக்கு வரவில்லை என்றும், ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக, நேற்று நள்ளிரவு முதல் 2

## மண்சரிவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நுவரெலியா, கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

## ஹற்றன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை உணவைச் சமைத்துக் கொண்டிருந்தபோது இந்த வெடிப்பு ஏற்பட்டது எனக் குறித்த உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு கொள்கலன் மற்றும் எரிவாயு அடுப்புக்கான குழாயில் வெடிப்பு ஏற்பட்டதால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தால் உணவகம் சேதமடைந்துள்ளதுடன், அங்கிருந்த உணவுகளும் பழுதடைந்துள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தடை செய்யப்பட்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்குள் நுழைய அவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 14 நாள்களில் இந்த நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் தவிர வேறு எவரும் நாட்டுக்கு வந்துள்ளார்களா என்பது குறித்து உரிய திணைக்களங்கள் ஆராயும் என்றும், அதற்கேற்ப சுகாதாரத்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

தடை செய்யப்பட்ட 6 நாடுகளைத் தவிர மற்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தத் தடையும் இல்லை என்றும், விசா வழங்கும்போது மேற்குறிப்பிட்ட பயணிகள் சம்பந்தப்பட்ட நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்களா என்பதை அதிகாரிகள் பரிசோதிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹப்புத்தளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வானில் சாரதி மாத்திரம் பயணித்துள்ள நிலையில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

## 'யுகதனவி' ஒப்பந்தம் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.ரீ.பி. தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கியநீதிபதிகள்குழாம்முன்னிலையில் இன்று ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

இதன்போதே எதிர்வரும் 16 மற்றும் 17 ஆம் திகதிகள் விசாரணைக்கான தினங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

யுகதனவி ஒப்பந்தத்துக்கு ஆளுங் கட்சியில் உள்ள பங்காளிக்கட்சிகளே கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

பேராயர்மெல்கம்ரஞ்சித்ஆண்டகை, ஐக்கியமக்கள்சக்தியினர், ஜே.வி.பியினர் உட்பட மேலும் பல தரப்பினரே மனுக்களை தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒற்றுமை முயற்சிக்கு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை முயற்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தலைமை தாங்க வேண்டும் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா வேண்டுகோள் விடுத்துள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சித்தார்த்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் தொடர்ச்சியாக அரசியல் தலைமைகளின் ஒற்றுமைக்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். தனிப்பட்ட ரீதியாகவும் மற்றவர்களுடன் பேசி பல முயற்சிகளை எடுத்து வருகின்றோம். இது ஒரு தனி மனிதன் செய்யக்கூடிய விடயமல்ல. அன்று இருந்த அரசியலுக்கும் இன்றுள்ள அரசியலுக்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆனால், எல்லோருமாக ஒற்றிணைந்து ஒற்றுமை முயற்சியை முன்னெடுத்து எல்லாக் கட்சிகளின் மத்தியிலும் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்தி முதலில் ஆகக் குறைந்தது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நாங்கள் ஒற்றுமைப்பட்டு ஒன்றுபடுவோமாக இருந்தால் அடுத்தகட்டமாக ஒரு பலமான தேசிய அரசியல் அமைப்பாக வந்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

ஆகவே, மாவை, சுரேஷ், செல்வம் போன்ற அனைவரும் இணைந்து இந்த முயற்சியை எடுக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை - என்றார்.

## சித்தர் தலைமையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாற்று வேண்டும். அந்த வரலாற்றுத் தேவையை உணர்ந்து கொண்டுள்ளோம். இதன் முதல்கட்ட கலந்துரையாடல் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி தலைவர்களுக்கிடையில் நடைபெற்றது. அதற்குப் பெரும் ஆதரவை அனைவரும் தெரிவித்திருந்தனர். இருப்பினும் சித்தார்த்தனே எங்களோடு முனைப்பாக தொடர்ந்தும் செயலாற்றினார். மற்றக் கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கும் கூட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும் அளப்பரிய பங்களிப்பைச் செய்தவர் சித்தார்த்தன்.

தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான ஒருமித்த நிலைப்பாட்டை எட்டும் வகையிலேகடந்தசிலமாதங்களாக சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன. இதில் காத்திரமான வெற்றியும் கண்டிருக்கின்றோம். தற்போது பல கட்சித் தலைவர்கள் சேர்ந்து முன்னெடுக்கும் நிலைமைக்கு இது வளர்ச்சி கண்டுள்ளது.

இதில் பல கூட்டங்களில் மாவை சேனாதிராஜா கலந்துகொண்டிருந்தாலும் இறுதி நேரங்களில் பின்வாங்கும் போக்கைக் கடைப்பிடித்து இருந்தார். அதற்கான காரணத்தை இப்போதுதான் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். இதனை ஏற்கனவே தெளிவுபடுத்தி இருந்தால் இன்னும் துரிதமான முன்னேற்றத்தை இந்த விடயத்தில் அடைந்திருக்க முடியும்.

இருப்பினும் இந்த விடயங்களைச் சித்தார்த்தனும் இணைந்தே முன்னெடுத்திருந்தார் என்பதை மாவை சேனாதிராஜா நன்கு அறிந்திருந்தார்.

சித்தார்த்தன் தலைமை தாங்கும் ஒருமித்த நிலைபாட்டை முன்னெடுப்பில் மாவை சேனாதிராஜா கலந்துகொள்வதில் விருப்பத்தைத் தெரிவித்திருப்பது பெரு மகிழ்ச்சி அளிக்கின்றது. அதை நாம் வரவேற்கின்றோம் - என்றார்.

## பாணின் விலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

எனினும், மக்களின் நன்மை கருதி 450 கிராம் பாணின் விலையை 10 ரூபாவால் மட்டும் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டு பிரதான கோதுமை மா நிறுவனங்களில் மாவின் விலையை அதிகரித்துள்ளதாலேயே விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பாண் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நீரைத் தவிர ஏனைய அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. எனவே, ஒரு இறாத்தல் பாணை நூறு ரூபாவுக்கு விற்றால்தான் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இருந்தும் மக்களுக்காகச் சொற்பளவு அதிகரிப்பையே செய்துள்ளோம் - என்றார்.

## இலங்கையைச் சேர்ந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர்.

அந்தமான் தீவு அருகே ஒரு விசைப் படகில் இருந்த 4 இலங்கை இஸ்லாமியர்களே இவ்வாறு இந்தியக் கடற்படையினரால் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 4 பேரும் சென்னையில் உள்ள எண்ணூர் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அங்கு குறித்த 4 பேரிடமும் இந்திய அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த செப்டெம்பர் 26ஆம் திகதி மட்டக்களப்பில் இருந்து புறப்பட்ட விசைப் படகில் புறப்பட்ட முகமது றிவ்கான், முகமது றியால், முகமட் கௌடர், முகமது ஹலில் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.



இவர்கள் பயணித்த படகில் ஐ.எம். யூ.எல்.ஏ.0093/பி.எல்.இ. என்ற இலக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சந்தர்ப்பவாதி மைத்திரி!

ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் பிரதான கட்சியான பொதுஜன பெரமுனவுக்கும் அதற்கு அடுத்த நிலையில் பெரிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முரண்பாடு உச்சம் பெற்று வருகின்றது.

சுதந்திரக் கட்சியின் நீண்ட வரலாற்றில் மிகப் பலவீனமான தலைவர் மைத்திரிபால சிறிசேன. அவர் கட்சித் தலைமையையும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியையும் கையில் வைத்திருக்கும் போதுதான் அவரது கட்சியில் இருந்து தெரிவான 96 எம்.பிக்கள் எண்ணிக்கை அவர் பக்கத்தில் மெல்ல மெல்லக் கரைந்து 16 ஆகக் குறைந்து போனது. அவரது சுதந்திரக் கட்சியில் எம்.பி பதவிகளை மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தம் வசம் வைத்துக் கொண்டுதான் பொதுஜன பெரமுன என்ற புதுக்கட்சியை ராஜபக்ஷ சாம்ராச்சியமாகக் கட்டி எழுப்பினர். அதைத் தடுப்பதற்கு வழி ஏதுமின்றி விழி பிதுங்கப் பார்த்திருந்தவர்தான் மைத்திரிபால சிறிசேன.

வரலாற்று பெருமையும், சரித்திர சாதனையும் படைத்த சுதந்திரக் கட்சி அவரது கண்ணுக்கு முன்னால் சிதறுண்டு போவதைப் பார்த்திருப்பதைத் தவிர ஜனாதிபதி மைத்திரிக்கு அப்போது வேறு வழியே இருக்கவில்லை.

சட்ட ரீதியில் தமக்கு இல்லாத அதிகாரத்தை தமக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்த போது, இனிப் பொதுத் தேர்தல்தான் என்ற நம்பிக்கையில் ராஜபக்ஷக்களும் அவர்களின் சகாக்களும் சு.கவை விட்டு விலகிப் பகிரங்கமாக பொதுஜனப் பெரமுனவில் இணைந்தனர்.

ஆனால் நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவின் நடவடிக்கை சட்டமுறையற்றது என்று தெரிவித்த உயர் நீதிமன்றத்தின் முழு ஆயம், ஜனாதிபதி மைத்திரிக்குக் குட்டு வைக்குமாற் போல, அவரது தேர்தல் பிரகடனத்தை தள்ளுபடி செய்யும் ஒரு தீர்ப்பை ஏகமனதாக வழங்கியமை அடுத்து, அந்த நாடாளுமன்றம் தொடர்ந்து நீடிக்க வேண்டியதாயிற்று.

அப்போதும் கூட சுதந்திரக் கட்சியில் எம்.பிப் பதவியை வைத்துக்கொண்டு புதுக்கட்சியை ஆரம்பித்து அதில் போய் இணைந்த ராஜபக்ஷ குழாமினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இயலாதவராக – திராணியற்றவராக இருந்தார் மைத்திரி.

அது மாத்திரமல்ல, அதன் பின்னர் வந்த பொதுத் தேர்தலில் சு.கவிலிருந்து பிரிந்து, தனிக்கட்சி அமைத்து பெரும் செல்வாக்குடன் எழுச்சி பெற்ற ராஜபக்ஷக்களின் பின்னால் போய் ஒட்டிக் கொண்டு அத்தரப்பு பிச்சையாகப் போட்ட இடங்களில், தான் உட்படத் தனது கட்சி வேட்பாளர் களை நிறுத்த வேண்டியவரனார் மைத்திரிபால சிறிசேன. தனது கட்சியிலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி ஆரம்பித்த பொதுஜனப் பெரமுன மீது நடவடிக்கை எடுக்க வக்கற்றவராக மாத்திரமல்லர், தொடர்ந்து அதில் ஒட்டிக் கொண்டுததான் தனது அரசியலை செய்கின்றார் அவர்.

இப்போது ராஜபக்ஷக்கள் அதிகார பீடத்தின் செல்வாக்குச் சரிவதாகத் தோன்றியதும், மெல்ல அதில் இருந்து கழறப் பார்க்கின்றார். சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் புதுக்கூட்டு அமைக்கலாமா என்று ஆருடம் பார்க்கின்றார். அவரின் நடவடிக்கை எல்லாமே அரசியல் சந்தரப்ப வாதம்தான்.

நாட்டின் பிரதான இரண்டு தேசியக் கட்சிகளும் சேர்ந்து இந்தத் தீவின் நீண்ட காலத் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் அதிசயமான – அற்புதமான – சரித்திர வாய்ப்பு நல்லாட்சி அரசின் காலத்தில் கிடைத்தது. ஆனால் அதன் தலைமை அரசியல் சந்தர்ப்பவாதியான மைத்திரி கைகளில் சிக்கியமையால், அந்த அரிய வாய்ப்பை இந்தத் தீவு பயன்படுத்த முடியாமல் போயிற்று.

இப்போது அடுத்த 'ரவுண்ட்' அரசியல் சந்தர்ப்பவாதத்தை ஆரம்பித்திருக்கின்றார் மைத்திரியார். அவ்வளவுதான்.

# இராணுவம் அமைத்த வீடு புத்தூரில் பயனாளிகளிடம்





யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியின் வழிகாட்டுதலின் கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே278 புத்தூர் கிராம அலுவலர் பிரிவில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு யாழ் மாவட்ட இராணுவ கட்டளை தளபதியினால் வீட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தினரால் சமூக நலனோம்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை புத்தூர் பகுதியில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி, இராணுவக் கட்டளைத் தலைமை உயரதிகாரிகள், கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# நாவலரின் 200 ஆவது ஆண்டு விழா; யாழில் அறநெறிப் பாடசாலைகளில் நூலகம்

நாவலரின் 200ஆவது ஆண்டினை முன்னிட்டு அறநெறிப் பாடசாலைகளில் நூலகம் அமைக்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை), நல்லூர் நாவலர் ஞாபகார்த்த மண்டபத்தில் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து, பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பிரதமரின் இந்து மத விவகார அலுவல்களுக்கான இணைப்பாளர் பாபு சர்மா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு முக்கிய அம்சமாக 192ஆவது குருபூசை தினத்தையும் கருத்திற்கொண்டு, நாவலர் பிறந்த மண்ணில், பிரதமரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு பூராகவும் இருக்கின்ற அறநெறிப் பாடசாலைகளில் 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, நூலகம் அமைக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்து கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் உமா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதா நாத் காசிலிங்கம், நந்திக்கொடி அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் தனபாலா மற்றும் ஏனைய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை பிரதமரின் அறிவித்தலின் மூலம் 200 ஆவது நூற்றாண்டு விழாவுக்கு அவர் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியீடு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கை முழுவதும் நாவலரின் 200 ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுவதற்காக சகல ஏற்பாடுகளையும் இந்து கலாசார திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒமிக்ரோன் மாறுபாட்டினை எதிர்கொள்ள தயாராகி வருகின்றது பிரித்தானியா



பிரித்தானியாவில் வர்த்தக நிலையங்களிலும், பொதுப் போக்குவரத்திலும் முகக்கவசங்கள் கட்டாயமாக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரித்தானியாவுக்குள் நுழையும் அனைத்து பயணிகளும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமைமுதல்புதியஒமிக்ரோன் மாறுபாட்டிற்கு பதிலளிக்கும் வித மாக PCR சோதனைகளை மேற் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மக்கள் தமது குடும்பத்தினருடன் கிறிஸ் மஸை அனுபவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்த இந்த நடவடிக்கைகள் உதவும் என சுகாதார செயலாளர் சஜிட் ஜாவிட் குறிப்பிட்டுள்ளார். மாற்றமடைக்கின்ற சூழலுக்கு ஏற்ப அரசாங்கம் விரைவாக செயல் படுவதா தெரிவித்துள்ள ஜாவிட், எனினும் தேவையற்ற பீதி ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில், 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெரியவர்களுக்கு தாம் முன்பு எதிர்பார்த்ததை விட முன்னதாகவே ஒரு பூஸ்டர் வழங்கப்படும் என தடுப்பூசிகள் மற்றும் நோய்த் தடுப்பு கூட்டுக் குழுவின் துணைத் தலைவர் பி.பி.சி ரேடியோ 4 ற்கு தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழலை எதிர்கொள்வது பற்றி குறிப்பிட்ட பேராசிரியர் அந்தோனி ஹார்ன்டன் முழு சமூகத்திலும் நோய் எதிர்ப்பு அளவை உயர்த்துவதற்கான ஒரு நல்ல, வலுவான நிலை உள்ளது. எனவே வயது வரம்பை நீட்டிப்பதன் மூலமும், இரண்டாவது டோஸ் மற்றும் பூஸ்டர் டோஸ் இடையேயான இடைவெளியைக் குறைப்பதன் மூலமும் பூஸ்டர் திட்டத்தை விரிவாக்கி விடுவதாகவும், இது ஒரு விவேகமான உத்தியாக இருக்கும். எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதையும், பிரித்தானியாவில் தடுப்பூசி கடவுச்சீட்டுகளை வழங்கும் திட்டத்தையும் அரசாங்கம் நிறுத்தியுள்ளது. அவை குளிர்காலத்திற்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது NHS ஐப் பாதுகாக்க, கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த, தலையீடு செய்யும் தேவை ஏற்பட்டால் ஒரு தற்காலிக திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் அரசாங்கம் இதை விட வேகமாகச் செயல்பட்டிருக்க முடியாது என சுகாதார செயலாளர் சஜித் ஜாவிட் தெரிவித்துள்ளார்.

## பயணத் தடையை உடனடியாக நீக்க தென்னாபிரிக்கா வலியுறுத்தல்



தங்கள் மற்றும் அதன் அண்டை நாடுகள் மீதான பயணத் தடையை உடனடியாக நீக்க வேண்டுமென தென்னாபிரிக்கா ஜனாதிபதி சிரில் ராமபோசா வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'தென்னாபிரிக்கா மீது விதிக்கப்பட்டுள்ள இந்த தடை நியாயமற்றது. பாகுபாடானது. இதனால் பெரும் அதிருப்தியடைந்துள்ளோம். பயணத்தடை அறிவியல் ரீதியிலானதல்ல. இந்த தடையினால் தென்னாபிரிக்காவின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும். அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் வரை கொரோனா திரிவு அடைவதை நிறுத்த முடியாது. பயணத்தடையினால் பயன் இல்லை' என கூறியுள்ளார். பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா உள்ளிட்டவை பயணத்தடை விதித்திருக்கும் நாடுகளில் அடங்கும்.

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றின் அதிகம் வீரியம் கொண்ட ஒமிக்ரோன் மாறுபாடு, மாத ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அவசர நிலையை பிரகடனப்படுத்தியது நியூயோர்க்



அமெரிக்காவில் நியூயோர்க் மாகாணத்தில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்க ஆரம்பித்துள்ளமையினால் பேரழிவு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தினசரி பாதிப்பு விகிதம் 3.45 சதவீதமாக உள்ளதுடன் 28பேர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை வைத்தியசாலைகளில் சராசரியாக ஒரு நாளில் 300க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகிறார்கள்.

எனவேதான், கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவுவதைத் தடுக்க அந்த மாகாணத்தில் பேரழிவு அவசர நிலையை ஆளுநர் கேத்தி ஹோசுல் பிறப்பித்துள்ளார்.

இந்த மாகாணத்தில், புதிய வகை வைரஸான ஒமிக்ரோன் கண்டறியப்படவில்லை. ஆனாலும் புதிய வைரஸ் உருவாகி நியூயோர்க்கில் முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் ஆளுநர் கூறியுள்ளார்.

மேலும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வதோடு, முன்னெச்சரிக்கை வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## புதிய வகை வைரஸ் திரிவு பேரழிவை ஏற்படுத்தாதாம்


### இங்கிலாந்து விஞ்ஞானி கணிப்பு



புதிய வகை கொரோனா வைரஸ் திரிவு பேரழிவை ஏற்படுத்தாதென இங்கிலாந்து விஞ்ஞானி பேராசிரியர் காலம் செம்பிள் தெரிவித்துள்ளார். புதிய வகை கொரோனா ஒமிக்ரோன் குறித்து உலக நாடுகள் அச்சம் அடைந்துள்ள நிலையில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். அந்தவகையில் புதிய வகை கொரோனா வைரஸ் திரிபு குறித்து விஞ்ஞானி பேராசிரியர் காலம் செம்பிள் கூறியுள்ளதாவது,

இது பேரழிவை ஏற்படுத்தாது.மேலும் எனது சகாக்கள் இந்த வைரஸ் பயங்கரமானது என கூறி இருக்கின்றனர். ஆனால் அவர்கள், நிலைமையை மிகைப் படுத்தி உள்ளதாகவே நான் கருதுகிறேன். இதேவேளை தடுப்பூசியால் கிடைக்கின்ற நோய் எதிர்ப்புச்சக்தி, இன்னும் கடுமையான நோயில் இருந்தும் மக்களை பாதுகாக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்

## வெளியானது ஒமிக்ரோன் வைரஸின் ஒளிப்படம்




புதிதாக உருமாற்றம் பெற்றுள்ள ஒமிக்ரான் கொரோனா வைரஸின் ஒளிப்படம், இத்தாலிய விஞ்ஞானிகளினால் வெளியிடப்பட்டுள்ளது.

உலகநாடுகளைஅச்சத்துக்குஉள்ளாக்கியுள்ள ஒமிக்ரான் வைரஸின் ஒளிப்படத்தை, முதன் முறையாக ரோமிலுள்ள Bambino Gesu குழந்தைகள் வைத்தியசாலையின் விஞ்ஞானிகளே வெளியிட்டுள்ளனர். வைரஸின் உருவத்தில் ஒட்டியிருக்கும் மனிதர்களின் செல்களுக்குள் நுழைய தேவைப் படும் புரதத்தில், டெல்டா வகை வைரஸை விட ஒமிக்ரான் வைரஸில் அதிக பிறழ்வுகள் உள்ளன எனத் தெரியவந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எனினும், இவை டெல்டா வகை வைரஸை விட அதிக ஆபத்தானவை என கருத முடியாது எனவும் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.




# ஒமிக்ரோன் அச்சுறுத்தலால் கண்காணிப்புக்கள் தீவிரம்

சீனாவின் ஊகானில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸானது அல்பா, பீற்றா, டெல்டா, டெல்டா பிளஸ் என பல்வேறு வகையில் உருமாறி உலகை அச்சுறுத்திவருகிறது.

தற்போது மேலும் உருமாறிய வலிமையான கொரானா வைரஸ் ஒன்று பரவி வருவது தெரிய வந்துள்ளது. போட்ஸ்வானா, தென்னாபிரிக்கா, ஹொங்கொங், இஸ்ரேல், பெல்ஜியம் என பல நாடுகளில் இதன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. முந்தைய திரிவுகளை விட வீரியம் மிகுந்த வைரஸாகக் கருதப்படும் இந்தத் தொற்று உலக நாடுகளுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தவைரஸுக்குஒமிக்ரோன் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த புதிய வைரஸால் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நாடுகளுக்கு பல நாடுகளும் பயணத்தடைகளை விதித்துள்ளன. தமது நாடுகளில் அந்த வைரஸ் பரவாமலிருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டுள்ளன.

கொரோனா வைரஸின் உருமாற்றமான ஒமிக்ரோன் வைரஸ் குறித்து உலக நாடுகள் அஞ்சி வரும் நிலையில் மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் கொரோனா பரவக்கூடிய பகுதிகளைக் கண்காணிக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசு எச்சரித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், பரிசோதனைகளைத் தீவிரப்படுத்தி கண்காணிப்புகளை மேம்படுத்த வேண்டும் என்றும் மத்திய அரசுகேட்டுக்கொண்டுள்ளது.

தடுப்பூசி செலுத்துவதை வேகப்படுத்த வேண்டும் என்றும் தேவை ஏற்பட்டால் தனிமைப்படுத்தல் பகுதிகளை உருவாக்க வேண்டும் எனவும் மாநிலங்களை இந்திய மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

# கொரோனாப் பாதிப்பு மீண்டும் அதிகரிப்பு கர்நாடகாவில் கூடுதல் கட்டுப்பாடுகள் அமுல்

கர்நாடகாவில் கொரோனாப் பாதிப்பு தற்போது மீண்டும் அதிகரித்து வருவது மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

தார்வாரில் உள்ள மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகள் 281 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. அங்கு மேலும் 1,800 இற்கும் மேற்பட்டோருக்கு கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

பெங்களூரு ஆனேக்கல்லில் உள்ள ஒரு கல்லூரியிலும் மாணவ, மாணவிகள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உள்பட 33 பேரும், வைட்பீல்ட் பகுதியில் உள்ள மழலையர் பள்ளியில் 33 குழந்தைகளும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளும் கல்லூரிகளும் திறக்கப்பட்ட பின்பு மாணவ, மாணவிகள் கொரோனா பாதிப்புக்கு உள்ளாகிவருவது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதைத்தொடர்ந்து கேரளா, மகாராஷ்டிரா மாநில எல்லைப் பகுதிகளை தீவிரமாக அதிகாரிகள் கண்காணித்துவருகின்றனர்.

கேரளா எல்லையையொட்டி உள்ள தட்சிண கன்னடா, குடகு, மைசூரு, சாம்ராஜ்நகர் ஆகிய 4 மாவட்டங்களின் எல்லைப்பகுதிகளில் சோதனைச் சாவடி அமைத்து 24 மணிநேரமும் கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கேரளா, மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்துவருபவர்களுக்குகொரோனாப்பரிசோதனைஅறிக்கையும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கொரோனாக் கட்டுப்பாடுகளும் அதிகரிக்கப்படவுள்ளன.



தென்னாபிரிக்கா, இஸ்ரேல் நாடுகளில் தற்போது ஒமிக்ரோன் என்ற வைரஸ் வேகமாக பரவி வருகிறது. இந்த வைரஸ் முன்பு இருந்த கொரோனா வைரஸைக் காட்டிலும் 5 மடங்கு வேகமாகப் பரவும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளமையால் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளை தீவிரமாக கண்காணிக்கவும், கொரோனா பரிசோதனையைத் தீவிரப்படுத்த விமான நிலைய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் உள்ள அனைத்து பேருந்து மற்றும் ரயில் நிலையங்களி லும் மீண்டும் பயணிகளுக்கு கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



# உடல் உறுப்புகள் கிடைக்காதமையால் ஆண்டுக்கு 5 லட்சம் பேர் உயிரிழப்பு

இந்தியாவில் தேசிய உடல் உறுப்பு தான தினத்தையொட்டி தலைநகர் டெல்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பிரபல மருத்துவர் மனோஜ் குமார் சாஹு கலந்து கொண்டு இந்தியாவில் உடல் உறுப்பு தானம் குறைந்துவருவது குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். அப்போது அவர், உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைக் குத் தேவையான உடல் உறுப்புகள் கிடைக்காததால் இந்தியாவில் ஆண்டு தோறும் 5 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது, எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர், ஒன்றரை லட்சம் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் நடைபெற வேண்டிய தேவையுள்ள நிலையில், இந்தியாவில் ஆண்டுக்கு 5,000 பேருக்கு மட்டுமே சத்திர சிகிச்சை நடக்கிறது. அதே போல் சுமார் 2 லட்சம் பேர் கல்லீரல் தானம் கிடைக்காததால் இறக்கின்றனர், என்றும் தெரிவித்தார். இந்தியாவில் உடல் உறுப்பு தானம் 0.01 வீதமாக மட்டுமே இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஏழ்மையான மாநிலங்களின் பட்டியலில் பீகாருக்கு முதலிடம்; தமிழ்நாடு கடைசியில்

பீகார், ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேசம் ஆகியவை இந்தியாவின் ஏழ்மை மிக்க மாநிலங்கள் என்று நிதி ஆயோக் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏழ்மையான மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்கள் இறுதி இடங்களைப் பிடித்துள்ளன.

நிதி ஆயோக்கின் அறிக்கையின்படி, இந்தியாவிலேயே பீகார் மாநிலத்தில்தான் 51.91 சதவீத மக்கள் வறுமையில் உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது இடத்தில் உள்ள ஜார்க்கண்ட் மாநிலத்தில் 42.16 சதவீத மக்களும், உத்தரப்பிரதேசத்தில் 37.79 சதவீத மக்களும் வறுமையில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல மத்தியப் பிரதேசத்தில் 36.65 சதவீத மக்களும், மேகாலயாவில் 32.67 சதவீத மக்களும் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர் என நிதி அயோக் அறிக்கை கூறுகிறது.

இந்தப் பட்டியலில், கேரளா (0.71சதவீதம்), கோவா (3.76 சதவீதம்), சிக்கிம் (3.82 சதவீதம்), தமிழ்நாடு (4.89 சதவீதம்) மற்றும் பஞ்சாப் (5.59 சதவீதம்) ஆகிய மாநிலங்களின் வறுமைக் குறியீடுகள் குறைந்த அளவிலேயே உள்ளன. இந்த மாநிலங்கள் யாவும் வறுமை மிகுந்த மாநிலங்களுக்கான பட்டியலில் கடைசி இடங்களைப் பிடித்துள்ளன.



சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஊட்டச்சத்து, குழந்தைகள் மற்றும் இளம்பருவ இறப்பு, பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்பு, பள்ளிப்படிப்பு ஆண்டுகள், பள்ளி வருகை, சமையல் எரிபொருள், சுகாதாரம், குடிநீர், மின்சாரம், வீடு, சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகள் போன்ற 12 அம்சங்களின் அடிப்படையிலும் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் மீது தாக்குதல் சுயாதீன விசாரணைகள் தேவை

## நாடாளுமன்றஉறுப்பினர்இரா.சாணக்கியன்வலியுறுத்தல்



முல்லைத்தீவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் ஒருவர் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்ட ஊடகவியலாளர் மீது கடந்த 27ஆம் திகதி இராணுவத்தினர் மிலேச்சத்தனமான முறையில் திட்டமிட்ட வகையில் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளியவாய்க்கால் கிழக்கில் வசித்து வரும் குறித்த ஊடகவியலாளர் கடந்த 27ஆம் திகதி செய்தி சேகரிப்பிற்காக முல்லைத்தீவு சென்று அங்கிருந்து வீடு திரும்பிய நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் பெயர் பலகையினை ஒளிப்படம் எடுத்த நிலையிலேயே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட நான்கு இராணுவத்தினர் ஊடகவியலாளரை கேள்வி கேட்டு அடையாளப்படுத்த சொல்லி கோரிய வேளை குறித்த ஊடகவியலாளர் அடையாள அட்டையினை எடுத்துக் காட்ட முற்பட்ட வேளையில் படையினர் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய படையினர் இராணுவ சீருடையிலும் கடமை அல்லாத நேரத்தில் இராணுவம் அணியும், இராணுவச் சீருடையான அரை காற்சட்டையுடனும் ரி சேட்டுடனும் நின்று தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இராணுவம் தாக்குதலுக்காக பயன்படுத்திய பச்சை பனை மட்டை ஒன்றில் முள்ளுக் கம்பிகள் சுற்றப்பட்ட ஆயுதம் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மூன்று இராணுவத்தினர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டமையுடன், பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது வெறும் கண் துடைப்பு கைதாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து நீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறும் சம்பவங்களை பார்க்கின்ற போது, எம்முள் அச்ச உணர்வு ஒன்று தோன்றுவதுடன், நாடு இராணுவமயமாக்கலினை நோக்கி நகர்கின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது. இதனை கூட்டமைப்பு என்ற வகையில் பலமுறை உரக்கச்சொல்லியிருக்கின்றோம்.

இதுகுறித்து இராணுவத்தளபதி மற்றும் அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோர் மௌனம் காக்கின்றமை வருத்தமளிக்கின்றது. குறித்த இருவரும் இதுதொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தற்போதைய அரசாங்கத்தின் கடந்த ஆட்சிக்காலத்தின் போதும் மிக மோசமான ஊடக அடக்குமுறைகள், ஊடகவியலாளர்களைக் கடத்திப் படுகொலை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்தநிலையில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட மாட்டார்கள் என கூறி தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. எனினும் தற்போதைய அரசாங்கத்தில் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக பிழைகளை சுட்டிக்காட்டுகின்ற ஊடகவியலாளர்கள் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எமது மக்களுக்கும் சுதந்திரமில்லை ஊடகவியலாளர்களுக்கும் சுதந்திரம் இல்லை. சுதந்திர ஊடக முடக்கமானது ஒரு நாட்டின் முடக்கத்துக்கு ஒப்பானது. அரச சார்பான தமிழ் அரசியல்வாதிகள் இவ் அரசின் இவ்வாறான செயல்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவதும் பக்கச் சார்பாக செயல்படுவதும் அவர்களுக்கு சார்பாக செயல்பாடுகளை சரி எனவும் நிறுவிக்கொண்டுள்ளார்கள்.

இந்த அரசின் காலத்திலேயே எம் மக்கள் பல இன்னல்களை அதிகளவாக அனுபவித்தனர் அனுபவித்துக்கொண்டும் வருகின்றனர். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வியாழேந்திரனின் வீட்டு முன்றிலில் கொலை; வழக்கு டிசெம்பர் 13க்கு ஒத்திவைக்கப்பட்டது

## கதறியழுகிறார் தாயார்



இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டு வாசல் தளத்திற்கு முன்பாக அவரது மெய்ப்பாதுகாவலர் எனது மகனை சுட்டுக் கொன்றது மல்லாமல் பஞ்சமா பாதகன் சந்தோசமாக திரிகின்றான் என படுகொலை செய்யப்பட்ட பாலசுந்தரத்தின் தாயார் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் மூன்றாம் திகதி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக அவரது மெய்ப்பாதுகாவலரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பாலசுந்தரத்தின் வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. குறித்த வழக்கு விசாரனை எதிர்வரும் 13ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் என நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது பாலசுந்தரத்தின் பெற்றோர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இவர்களது கள்ள வேலைகள் எனது மகனுக்கு தெரிந்து இருக்கின்ற காரணத்தினால் தான் 15 பேரை வைத்து அடித்தும் வெடி வைத்தும் கொண்டுள்ளனர் என சந்தேகம் எழுந்துள்ளது .

ஒரு இராஜாங்க அமைச்சரின் வீட்டில் உள்ள சி.சி.டி.வி. கமராக்கள் வேலை செய்யாதற்க்கான காரணம் என்ன? அல்லது அவரது வீதியிலுள்ள மற்றைய கமராக்கள் வேலை செய்யாததற்கான காரணம் என்ன ? திட்டம் போட்டு அடித்தும் வெடி வைத்தும் கொலை செய்துள்ளனர் என்பது தான் உண்மையாய் இருக்கின்றது.

நாங்களும் மாதக்கணக்கில் நீதிமன்றத்திற்கு அலைந்து திரிகின்றோம் எமது கண்ணீருக்கான பதில் கடவுள் நிச்சயம் தருவான் என்றனர்.

# சாதனையாளர் மதிப்பளிப்பு

ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் 1991 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்ற சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மீரா வோடை அந்நூர் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

அமைப்பின் தலைவர் மிருக வைத்தியர் எஸ்.சித்தீக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தரம் ஐந்து புலமைப் பரிசில், க.பொ.த. சாதாரண தரம், கா.பொ.த. உயர் தரம் ஆகியவற்றில் சாதனை படைத்த அமைப்பிலுள்ள உறுப்பினர்களின் பிள்ளைகள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

இந்த நிகழ்வில், விருந்தினர்களாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், ஓட்டமாவடி தேசிய பாடசாலை அதிபர் எம்.ஏ. ஹலீம் இஸ்ஹாக், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம். பரீட், ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலய அதிபர் எம்.எல். பைசல் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# விவசாயிகளுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடு

சேதனப் பசளை தொடர்பான விவசாயிகளுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடு ஒன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மவாட்ட போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் பாலையடிவட்டைக் கிராமத்தில் நடைபெற்றது.

அப்பகுதி விவசாய விரிவாக்கல் போதனாசிரியர் ரி.கோபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உதவி விவசாயப் பணிப்பாளர் த.மேகராசா, மற்றும் ஏனைய விவசாய உத்தியோகஸ்த்தர்கள், அரச அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது விவசாயிகளுக்கு சேதனப் பசளை தொடர்பான விளக்கங்களும், பயிற்சிகளும் வழங்கப்பட்டமையுடன், இயந்திரத்தின் மூலம் இயற்கையாகவே கிடைக்கும் இலை குலைகளைத் துண்டு துண்டுகளாக வெட்டும் செயன்முறையும், விவசாயிகளுக்குச் செய்து காண்பிக்கப்பட்டன.

# லங்கா பிறீமியர் லீக் போட்டிகளை மைதானத்தில் நேரடியாக பார்வையிட ரசிகர்களுக்கு அனுமதி!




இலங்கையில் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ள லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில், மட்டுப்படுத்தப்பட்ட அளவு ரசிகர்கள் மைதானத்துக்கு அனுமதிக்கப்படுவர் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் அனுமதியின்படி, மட்டுப்படுத்தப் பட்ட அளவிலான ரசிகர்களை எல்.பி.எல். போட்டிகள் நடைபெறும் மைதானத்துக்குள் உள்வாங்க முடியும் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தன்னுடைய உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ரசிகர்கள் இல்லாமல் கிரிக்கெட்டில் ஒன்றுமில்லை. கிரிக்கெட்டின் ரசிகன் என்ற ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட அள விலான ரசிகர்களை மைதானத்துக்குள் அனுமதிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளமையை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களைக் கருத்திற்கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது, என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

எல்.பி.எல். தொடரானது, எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதி கோல் கிளேடியேட்டர்ஸ் மற்றும் ஜப்னா கிங்ஸ் அணிகளுக் கிடையிலான போட்டியுடன் ஆரம்பிக்கின்றது. இதில், நடைபெறவுள்ள 20 லீக் போட்டிகள் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்திலும், ஏனைய போட்டிகள் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

தொடரின் இறுதிப்போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது. மறுநாளான 24ஆம் திகதி இறுதிப்போட்டிக்கான மேலதிக நாளாக ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# புதிய லெஜண்ட்ஸ் தொடர் ஜனவரியில் ஓமானில் நடைபெறவுள்ளதாக அறிவிப்பு

சர்வதேச கிரிக்கெட்டில் பிரகாசித்த முன்னாள் வீரர்கள் விளையாடும் புதிய லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஓமானில் நடைபெறவுள்ளது. இலங்கை, பாகிஸ் தான், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் இதற்கு முன்னரான லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடரில் விளையாடியிருந்தனர்.

தற்போது, இந்த நாடுகளைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்களை உள்ளடக்கி, இந்தியா, ஆசியா மற்றும் உலகக் கிரிக்கெட் பதி னொருவர் என்ற மூன்று அணிகள் உருவாக் கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராகச் செயற்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரவி சாஸ்திரி இந்தத் தொடருக்கான ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் இரண்டாவது டெஸ்ட் ஆரம்பம்

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது. சீரற்ற காலநிலை காரணமாக போட்டியின் இன்றைய நாள் ஆட்டம் பிற்பகல் 3 மணிக்கே ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் தற்போது நடைபெற்று வருகின்ற டெஸ்ட் தொடருக்கான இலங்கை குழுவில் இடம்பெற்றிருந்த ஐந்து வீரர்களை உயிரியல் பாதுகாப்பு வளையத்தில் இருந்து விடுவிக்க இலங்கை கிரிக்கெட் தேர்வாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி துஷ்மந்த சமீர, அசித பெர்னாண்டோ, கமில் மிஷாரா, சுமிந்த லக்ஷான் மற்றும் ரொஷேன் சில்வா ஆகிய வீரர்களே இவ்வாறு இலங்கை டெஸ்ட் குழாத்திலிருந்து வெளியேறியுள்ளனர். இவர்களில், மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய வேகப்பந்துவீச்சாளர் துஷ்மந்த சமீரவுக்கு ஓய்வளிக்க தேர்வாளர்களால் அவரை விடுவிக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் முதல் தொடர்ச்சியாக இலங்கை அணிக்காக சர்வதேசப் போட்டிகளில் விளையாடி வருகின்ற காரணத்தால் அவருடைய வேலைப்பளுவைக் குறைக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான்காவது ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழா எதிர்பார்ப்புகளுடன் களமிறங்கும் இலங்கை அணியினர்

பஹ்ரைனின் மனமா நகரில் அடுத்த மாதம் 2 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ள நான்காவது ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் பங்குபற்று வதற்காக இலங்கை அணி அங்கு சென்றுள்ளது. இப்போட்டித்தொடரில் இலங்கையைப் பிரதிநிதித் துவப்படுத்தி 7 பேர் பங்குபற்றவுள்ளனர்.

20 வயதுக்குட்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்கும் ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் மெய் வல்லுநர் போட்டி உள்ளிட்ட 9 வகையான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை அணிக்கான பூரண அனுசரணையை முதல் தடவையாக இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு வழங்குகிறது.

இவ்வருடம் நடைபெற்ற டோக்கியோ பரா ஒலிம்பிக்கில் இலங்கை உலக சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்று இலங்கைக்கு பெருமை ஈட்டிக்கொடுத்தமை, இம்முறை ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் பங்கேற்கும் இலங்கை இளையோர் பரா அணிக்கு சிறந்த அனுசரணை கிடைப்பதற்கும் உதவிகரமாக அமைந்ததாக தேசிய பரா ஒலிம்பிக் குழுவின் உப தலைவர் பிரியன்த்த பீரிஸ் தெரிவித்தி ருக்கிறார்.

ஆசிய இளையோர் பரா விளையாட்டு விழாவில் இலங்கையால் இதுவரை 3 தங்கப் பதக்கங்களும், 3 வெள்ளிப் பதக்கங்களும் வெல்லப்பட்டுள்ளன. 2009 இல் ஜப்பானின் டோக்கியோவில் நடத்தப்பட்ட முதலாவது தொடரில் ஒரேயொரு வெள்ளிப் பதக்கத்தை மாத்திரம் இலங்கை வென்றிருந்தது. 2013 இல் மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற இரண்டாவது தொடரில் இலங்கை 3 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளிப் பதக்கங்களையும் கைப்பற்றியிருந்தது. எனினும், ஐக்கிய அரபு இராச்சியத் தின் டுபாய் நகரில் நடைபெற்ற 3 ஆவது தொடரில் இலங்கையால் எந்தவொரு பதக்கத்தையும் கைப்பற்ற முடியாமல் போயிருந்தது.



2017 இல் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற பரா நீச்சல் வீரரான நவீட் ரஹீம், இலங்கை அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆரம்ப வைபவத் தின்போது இலங்கை தேசியக் கொடியை ஏந்திச்செல் லும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**இலங்கை அணி விவரம் -**

**நவீட் ரஹீம்** (எஸ்10 ஆண்களுக்கான 50 மீற்றர் நீச்சல்போட்டி, 100 மீற்றர் நீச்சல் போட்டி)

**ஜனனி தனஞ்சனா** (டி 46 பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டி, 200 மீற்றர் ஓட்டப்போட்டி, நீளம் பாய்தல்)

**சப்ரான் மொகமட்** (டி 46 ஆண்களுக்கான நீளம் பாய்தல்)

இசுரு அசங்க (டி47 ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி, 200 மீற்றர் ஓட்டப் போட்டி, நீளம் பாய்தல்)

**ஜேசன் ஜயவர்தன** ( டி41 ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டி, எவ் 41 ஆண்களுக்கான குண்டெறிதல், தட்டெறிதல்)

**ரவிந்து சிரஞ்சய** (பார்வைக் குறைபாடுடையவர்கள் பங்கேற்கும் டி11 ஆண்களுக்கான100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர்)

செலீனா பஸ்நாயக்க (எஸ்10 பெண்களுக்கான 50 மீற்றர் நீச்சல் போட்டி, 100 மீற்றர் நீச்சல் போட்டி, 400 மீற்றர் நீச்சல் போட்டி)

# வீட்டு வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் ஊழியர் சேம இலாப நிதியை பெற ஏற்பாடு

வீட்டு வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களை ஊழியர் சேம இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்குள் உள்வாங்குவதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம் எனவும் அவர்களையும் இந் நாட்டின் ஊழியர் சேம இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு பங்களிப்பவர்களாக உருவாக்குவது அவசியம் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தொழில்புரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் அடக்கு முறைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக ஆசிய ஊடக மற்றும் கலாசார சங்கம், இலங்கை சொலிடாரிட்டி நிலையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஊடகசெயலமர்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த செயலமர்வின்போது, சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தால் கொண்டு வரப்பட்டுள்ள ஐ.எல்.ஓ 190 மற்றும் ஐ.எல்.ஓ 189 விடயங்கள் தொடர்பில் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த சட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டால், இலங்கையில் தொழில்புரியும் வர்க்கத்துக்கு எதிரான அடக்முறைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகளை இல்லாதொழிப்பது, தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் அதன் மூலம் கிடைக்கும் சலுகைகள் தொடர்பாகவும் பெரு வாரி–யாகக் கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் கூறுகையில் –

தொழில்புரியும் இடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமை மற்றும் அடக்குமுறைகள் இடம்பெறுவதைக் குறைத்துக்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் நிறைவேற்றப்பட்டு சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தால் கொண்டு வரப்பட்டுள்ள ஐ.எல்.ஓ 190 மற்றும் ஐ.எல்.ஓ 189 ஆகிய யோசனைகளை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்து வதற்கு சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் நாடென்ற அடிப்படையில் இலங்கை கடமைப்பட்டுள்ளது.

ஆகவே, இது தொடர்பாக நிலைமை மற்றும் பின்புலம் ஆகியவற்றை அமைச்சரவைக்கு அறிவித்ததை அடுத்து, இதனை ஏற்றுக்கொண்டு முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக நாடாளுமன்றில் முன்வைத்துள்ளேன்.

எனினும், இந்த செயற்திட்டத்தின்போது எம்மால் எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் அதிகளவில் உள்ளன. எமது நாட்டில் உள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாக இதனை எவ்வாறு நடை முறைப்படுத்துவது என்ற கேள்வி எழுகிறது. அதில் உள்ள நடைமுறைத் தன்மை என்ன? மேலும், இது தொடர்பாக பல்வேறு விதமான கருத்துக்களும் உள்ளன.

விசேடமாக, இந்த யோசனைகளை ஏற்றுக்கொண்ட உலக நாடுகள் சில உள்ளன. அந்த நாடுகள் இந்த விடயம் தொடர்பாக சட்டத் திட்டங்களில் செய்துள்ள மாற்றங்கள் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்து, எமது நாட்டில், எமது கலாசாரத்துக்கு, எமது வேலைத்தளங்களுக்கு ஏற்புடையதான இதனைச் செய்து கொள்வதற்காக எங்களுக்கு தேசிய ரீதியானதும் விரிவானதுமான பேச்சு நடத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

அது போலவே, அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்புரியக்கூடிய இரண்டு தரப்பு தொழிலாளர்களையும் உள்ளீர்க்கும் வகையில், இந்தச் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

மேலும், குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக தண்டனை வழங்கக்கூடிய முறைகள் குறித்து விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவினரால் எமக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், அது தொடர்பான முறைப்பாடுகள் மிகவும் குறைவாகவே பதியப்படுகின்றன.

ஆகவே, பாலியல் வன்கொடுமைகள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கான வழிமுறையொன்றை தொழில் ஆணையாளருக்கு வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக துறைசார் நிபுணர்கள் குழுவினால் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இனிவரும் காலங்களில் நாங்கள் பிரிதொரு குழுவின் ஊடாக பேச்சு நடத்தி, தேவையான சட்டத் திட்டங்களை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.



# அதிவேகவீதியில் பஸ்களை நிறுத்தி இருக்கைகளை மாறிய சாரதிகள்

## எச்சரித்தார் நீதிவான்

அதிவேக வீதியில் பஸ்களை நிறுத்தி சாரதி இருக்கைகளை மாறிக்கொண்ட சாரதிகள் இருவரையும் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் தொடங்கொட பரிவர்த்தனை நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணை நடத்தப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சாரதிகள் இருவரும் மத்துகம பிரதான நீதிவான் தம்மிக்க உடுவ விதான முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, ஒவ்வொருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் கடுமையாக எச்சரித்தார்.

இந்த பஸ்கள் கடவத்தை, அம்பலாங்கொடை சேவையில் ஈடுபடும் நிலையில் தொடங்கொடையில் இவ்வாறு பஸ்களில் இருந்து மாறிக் கொண்டனர்.

# கேகாலை வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

கேகாலை– ரொக்ஹில் – கஹட்டபிட்டிய பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்த எரிவாயு அடுப்பொன்று, தீப்பற்றி வெடித்து சிதறியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வீட்டின் உரிமையாளர், தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பில் நீரை கொதிக்க வைத்து விட்டு குளியலறைக்கு சென்ற வேளையில் இந்த வெடிப்புச் சம்பவம், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தின்போது, சமையல் எரிவாயு கொள்கலனுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. ஆனால் அடுப்பு வெடித்து, அதன் பாகங்கள் சமையலறை முழுவதும் சிதறிக் காணப்பட்டன என வீட்டின் உரிமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

# சீனி உற்பத்தியை அதிகரிக்க புதிய சீனித் தொழிற்சாலை

## இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புற தெரிவிப்பு

வெலிஓயா பிரதேசத்தில் புதிய சீனித் தொழிற்சாலை ஒன்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புற தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற தமது அமைச்சுக்கான ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சீனி விலையைக் குறைந்த அளவில் பேணி, நாட்டில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் பணிகளும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீள ஆரம்பிக்கப்பட உள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புற தெரிவித்துள்ளார்.

# மண்முனைப்பற்று பிரதேசசபையின் தவிசாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு– கிரான்குளத்தின் பிரதான வீதியில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கிரான்குளம் விளையாட்டு மைதானத்தை மண்முனைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர், வேலியிட்டு அடைக்க மேற்கொள்ளும் நடவடிக்கையைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் கிரான்குளம் பகுதியைச் சேர்ந்த விளையாட்டுக்கழக இளைஞர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாக விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்ட பகுதியை, தனது காணியென கூறி மண்முனைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் அபகரிக்க முனைகிறார் எனவும் இதன்போது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அண்மையில் அந்தப் பகுதிக்கு வந்த மண்முனைப்பற்று பிரதேச செயலாளர், குறித்த காணி தொடர்பில் எந்தச் செயற்பாட்டையும் மேற்கொள்ளவேண்டாம் எனத் தெரிவித்திருந்த நிலையிலும் அந்தக் காணியை தவிசாளர் வேலியிட்டு அடைத்துள்ளார் எனவும் விளையாட்டு கழக உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே, மேற்படி காணியை விளையாட்டு மைதானத்துக்காக முழுமையாகப் பெற்றுத்தரு மாறும் தவிசாளரின் செயற்பாடுகளைக் கண்டித்தும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும் சிலர் கோஷங்களை எழுப்பியமையையும் காணமுடிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2021இல் வெளியிடப்பெற்றது.